**மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

**1 நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயலகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு செயலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் செயலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- செயலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- செயலகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- செயலகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- செயலகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக செலவிடப்பட்ட சம்பள செலவினம் ஏனைய நிறுவனத்தினால் செலவிடப்பட்டதன் காரணமாக செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் சரியான நிலைமை வெளிப்படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் வருடாந்த சம்பள செலவினம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 127 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அலுவலகம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஒரு பிரிவாக செயற்படுகின்றமையினால் அதன் சகல உத்தியோகத்தர்களுக்கும் சம்பளம் அந்த அமைச்சின் மூலம் செலுத்தப்படுகின்றமையால் தேசிய செயலகத்தின் கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் இருந்து வருடாந்த சம்பள செலவினத்தை குறிப்பிட்டு குறிப்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் வருடாந்த சம்பளம் நிதிக்கூறுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 ஆன நிலையான வைப்புக்களுக்காக ஆண்டிற்குரிய ரூபா 1,021,574 ஆன வட்டி வருமானம் கிடைக்க | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது அந்த வட்டி கணக்கீடு செய்யப்படும். | நிலையான வைப்புக்களுக்குரிய வட்டி சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக அந்த அளவினால் ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்ததுடன் ரூபா 2,000,000 மும்மாத நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 211,744 ஆக இருந்த போதும் ரூபா 242,037 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 30,293 இனால் ஆண்டின் வருமானம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | செய்யப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 | செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 2,658,666 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த செயலகத்தில் சகல நிலையான சொத்துக்கள் தொடர்பாகவும் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பௌதீக பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அரசாங்கத்தின் நிரந்தர உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்காக பதவியணியினரில் 67 பதவிகள் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. எனினும் இதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்தது டன் ஆட்சேர்த்தல் | அமைச்சின் ஒரு பிரிவாக செயற்படுகின்ற மையினால் செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் களுக்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் மொத்த சம்பளம் செலுத்துதல் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வரிமை அமைச்சின் 46 உத்தியோகத்தர்களும், சமூக சேவைகள் திணைக்களத்தின் 03 உத்தியோகத்தர்களும் பதவியணியினராக செயலகத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டி ருந்தனர். இதற்காக அமைச்சின் 25 உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த சம்பளத்திற்காக அமைச்சினால் ரூபா 15,430,524 தொகையும், சமூக சேவைகள் திணைக்களத்தின் 03 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 2,347,260 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் 21 உத்தியோகத்தர் களுக்காக சம்பளம் செலுத்தியமை தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை. | மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 147,747,119 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 81,537,169 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 66,209,950 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு சுப்பிரி வாசனா லொத்தர் வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் (எ) பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோர்களுக்கு பிரதான காரணம் என்ன என்பதைக் கண்டறிதல் மற்றும் அவற்றை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் (ஒ) | ஊனமுற்றோர்களுக்காக மற்றும் நீண்டகாலம் வைத்தியசாலைகளில் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் ஊனமுற்றோர்களாக மாறுவதை தடுக்கும் நோக்கில் உதவி உபகரணங்களை வழங்குதல் மற்றும் | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களை ஸ்தாபித்து பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான மற்றும் செயற்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சட்டத்தின் (ஔ) பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கவேண்டியிருந்த போதிலும் அவர்களை கண்காணிப்பதற்காக நிறுவனம் ஸ்தாபித்து பேணிச் செல்லல் மற்றும் அவ்வாறான நபர்களுக்கு கல்விசார் மற்றும் தொழிற்பயிற்சி வழங்குதல் மற்றும் சட்டத்தின் (க) பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்கி நிறுவனத்தை ஸ்தாபித்தல் மற்றும் அவ்வாறான நபர்களுக்கு கல்விசார் மற்றும் தொழிற்பயிற்சி வழங்குவதற்கு அரசாங்கம் நபர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்த போதிலும் உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன் ஊனமுற்றோர்களுக்கான பாதுகாப்பு நிலையமொன்றை பேணிச்செல்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஊனமுற்றோர்களைப் பாதுகாப்பதற்காக நிறுவனம் ஸ்தாபித்து அவர்களுக்கு தொழிற் பயிற்சியும் வழங்கப்படுவதுடன் சிகிச்சைகள் மற்றும் முன்பள்ளி கல்வியும் வழங்கப்படுகின்றது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1996 இன் 28 ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் I ஆம் பகுதியின் 2 ஆவது பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோர்களுக்காக தேசிய சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது தேசிய சபையினால் ஊனமுன்றோர்களின் தன்மை தொடர்பாக இலங்கை தேசிய செயற்பாட்டு திட்டத்தை தயாரித்தல், | 2024 ஆம் ஆண்டில் ஊனமுற்றோர்கள் தொடர்பாக இலங்கை தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு உள்ளதுடன் சமூக சேவைகள் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஊடாக பெறப்பட்ட தரவுகள் மற்றும் அந்த தகவல்கள் ஊனமுற்றோர்களுக்கான தேசிய செயலகத்துடன் பகிர்ந்துகொள்வதற்கு | சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊனமுற்றவர்களை முகாமைத்துவ தகவல் தயாரித்தல் (DMIS) ஊனமுற்றோர்களுக்காக பொருத்தமான காப்புறுதி திட்டமொன்றை தயாரித்தலை உள்ளடக்கிய முக்கியமான தீர்மானங்களை அமுல்படுத்துதல் தற்போது வரை மேற்கொள்ளப்படவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் ஊனமுற்றோர்களுக்கான தேசிய சபைக்கிடையே ஊனமுற்றோர்களை நோக்காகக் கொண்டு காப்புறுதி வழங்குதல் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கடந்த ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி சுப்பிரி வாசனா சம்பத்த லொத்தர் வருமானத்தை ஊனமுற்றோர்களுக்கான தேசிய நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 82,597,195 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 24,050,000 மாத்திரம் வழங்கப் பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்குரிய சுப்பிரி வாசனா சம்பந்த லொத்தர் வருமானத்தில் எந்தவொரு தொகையும் தேசிய செயலகத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 225,104,617 ஆகும். இதன் காரணமாக ஊனமுற்றோர்களுக்கான வீட்டு உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் உரிய பிரகாரம் அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. | மரணமடைந்தமை, குடியிருப்பதிலிருந்து விலகிச் செல்லல், மாகாண சமூக சேவைகள் திணைக்களம், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொண்டர் நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் மூலம் வீடுகளை வழங்குதல், வீட்டு உதவிகளை நிராகரித்தல் போன்ற காரணத்தின் அடிப்படையில் வீட்டு உதவிகளை நிராகரித்தமையால் மீண்டும் பெறப்பட்ட பணத்தில் இருந்து மீண்டும் வீட்டு உதவிகளை வழங்குதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் முறையில் ஆகக் கூடிய செயற்திறனான நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் பண்தை பெற்றுக்கொள்ளல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது தேசிய சபையில் 04 தடவைகள் மாத்திரம் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட மேல், | உலக வங்கி உதவியின் கீழ் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட போதும் அதனை நடாத்திச் செல்வதற்கு தேவையான | முன் சிறுவர் நிலையங்களை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| தெற்கு, மத்திய மற்றும் வடக்கு என்ற 04 மாகாணங்களை மேவுகை செய்யும் வகையில் 04 காப்பக நிலையங்கள் ஸ்தாபிப்பதற்கு பதிலாக தெற்கு மாகாணத்தில் அக்குரச பிரதேசத்தில் மாத்திரம் ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட முன் சிறுவர் அபிவிருத்தி நிலையம் மீளாய்வாண்டின் யூன் 27 ஆம் திகதி ஊனமுற்றோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை இந்த நிலையம் பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு காணப்பட்ட பொருளாதார சிக்கல்களுக்கு இடையே வழங்கப்படுகின்ற ஆசிய அபிவிருத்தி உதவியின் கீழ் ஆகும். அதன் பிரகாரம் 2024 யூன் 30 ஆம் திகதி வரையில் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்பட்டிருந்தது. தேவையான பதவியணியினர்களை சேர்ப்பதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு 2024 பெப்ரவரி 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பதவியணியினர் சேர்க்கப்பட்டதன் பின்னர் இந்த பணிகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |